சார்பு நீதிமன்றம் மேட்டுப்பாளையம்

அசல் வழக்கு எண்.109/2021

2023 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 13 ம் நாள் வா.சா.1 என்பவரது சாட்சிய வாக்குமூலம் (1873 ம் ஆண்டு 10 ஆவது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.தினேஷ்குமார், இளநிலை உதவியாளர், என்பவரால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | நடராஜன் | வயது | 72 |
| த/பெ | சுப்பைய கவுடர் | வட்டம் | மேட்டுப்பாளையம் |
| விலாசம் | காட்டுர், மேட்டுப்பாளையம் | மாவட்டம் | கோவை |
| | | தொழில் | ஓய்வு பெற்ற ஆசிரியர் |

<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 3 ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை:</u>

3 ம் பிரதிவாதி பொன்னுசாமி B.Sc படித்துள்ளார் என்றால் சரி தான். படித்து முடித்ததும் மின்சாரவாரியத்தில் ஒப்பந்த தொழில் ஈடுபட்டார் என்றால் சரி தான். அவர் பள்ளி மாணவர்களுக்கு டியூசன் எடுத்தார் என்றால் இல்லை. கொடைக்கானலில் அரசு ஒப்பந்ததாரராக இருந்தார் என்றால் சரி தான். காரமடையில் ஸ்ரீ பால வேல் முருகன் என்ற பெயரில் தனியார் நிதி நிறுவனம் நடத்தி வந்தார் என்றால் சரி தான். கோயமுத்தூரில் உள்ள கணபதியில் ஸ்ரீ ஜோதி இன்டஸ்ட்ரீஸ் என்ற நிறுவனத்தில் கணக்காளராகவும் வேலை செய்தார் என்றால் சரி தான். 3 ம் பிரதிவாதி 2003 ம் ஆண்டில் மேட்டுப்பாளையத்தில் உள்ள வட்டாட்சியர் அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணியில் சேர்ந்தார் என்றால் சரி தான். பின்னர் தொழிலாளர் துறையிலும், மருத்துவ துறையிலும் உதவியாளராக பணிபுரிந்தார் என்றால் சரி தான். அதனால் 3 ம் பிரதிவாதி அவருக்கு வந்த வருமானத்தை வைத்து தான் பிராது 6 வது இன சொத்தை வாங்கினார் என்றால் சரி அல்ல. பிராது 6 வது இன சொத்தை எவ்வளவு தொகைக்கு கிரயம்

பெறப்பட்டது என்றால் தோராயமாக ரூ.22, 000/-க்கு பெறப்பட்டது. அந்த தொகையை யார் யார் எவ்வளவு சேர்ந்து செலுத்தினோம் என்றால் என்னால் குறிப்பிட்டு சொல்ல முடியாது. நான் ரூ.10, 000/- கொடுத்தேன். எந்த தேதியில் கொடுத்தேன் என்றால் 1992 ம் ஆண்டில் ஜனவரி மாதத்தில் கொடுத்தேன். நான் ரூ.10, 000/- கொடுத்ததை காட்ட ஆவணம் ஏதாவது உள்ளாத என்றால் இல்லை. பிராது 6 ம் இன சொத்தை கிரயம் பெற்று எத்தனை நாட்களுக்கு பிறகு அந்த சொத்து கிரயம் பெறப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியும் என்றால் சுமார் 6 மாதங்கள் கழித்து தெரியும். யாரிடம் இருந்து கிரயம் பெறப்பட்டது என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியும். எங்களுடைய பெரியப்பா மகன்கள் கந்தசாமி மற்றும் துரைசாமி ஆகியோர்களிடம் கிராயம் பெறப்பட்டது. எந்த புல எண்ணில் எவ்வளவு விஸ்தீரணம் கிரயம் பெறப்பட்டது என்றால் புல எண் தெரியாது. விஸ்தீரணம் சுமாராக ¾ ஏக்கராகும். அந்த நிலம் எத்தனை புல எண்களில் அமைந்துள்ளது என்று தெரியுமா என்றால் 3 புல எண்களில் அமைந்துள்ளது. நான் கொடுத்ததாக சொல்லும் ரூ.10, 000/- என்னுடைய தனிப்பட்ட பணம் என்றால் சரி தான். நான் எத்தனை சொத்துக்கள் வாங்கி உள்ளேன் என்றால் மேட்டுப்பாளையத்தில் உள்ள ஒரே ஒரு வீட்டை மட்டும் வாங்கி உள்ளேன். அந்த வீட்டை எந்த வருடம் வாங்கினேன் என்றால் 1987 ம் ஆண்டு வாங்கினேன். நான் வாங்கிய வீட்டில் பிரதிவாதிகளுக்கு உரிமை உள்ளதா என்றால் இல்லை. ஏன் இல்லை என்றால் அந்த சொத்தை எனது மனைவிக்கு அவரது தகப்பனார் வாங்கி கொடுத்தது. கிரயப் பத்திரம் என் பெயரில் உள்ளது என்றால் எனது பெயரிலும் எனது மனைவி பெயரிலும் உள்ளது. அந்த கிரய பத்திரத்தில் எனது மாமனார் பணம் கொடுத்து தான் கிரயம் பெறப்பட்டதாக இல்லை என்றால் சரி தான். நான் LIC ல் கடன் பெற்று அந்த சொத்தை வாங்கினேன். 1 மற்றும் 2 பிரதிவாதிகளுக்கு விவசாயம் மட்டுமே தொழில் என்றால் சரி தான். நானும், 3 மற்றும் 4 பிரதிவாதிகளும் அரசு

பணியில் தனியாக இருந்தோம் என்றால் சரி தான். நான்வாங்கிய சம்பள பணத்தை நான் மட்டும் தனியாக வைத்து கொண்டேன் என்றால் எனக்கு திருமணம் ஆகும் வரை எனது அம்மாவிடம் கொடுத்து விடுவேன். திருமணத்திற்கு பின்னர் அவ்வப்போது அம்மாவிடம் கொடுப்பேன். 3 ம் பிரதிவாதி அவருடைய சம்பள பணத்தை அவரே வைத்து கொள்வார் என்றால் எனக்கு தெரியாது. 4 ம் பிரதிவாதியும் அவருடைய சம்பள பணத்தை அவரே வைத்து கொள்வார் என்றால் எனக்கு தெரியாது. நான் மேட்டுப்பாளையத்தில் உள்ள மகாஜன மேல்நிலைப்பள்ளியில் வேலைக்கு சேர்ந்த பின்னர் மேட்டுப்பாளையத்திற்கு குடிமாறி டியூசன் எடுத்து வந்தேன் என்றால் வேலை சேர்ந்த முதல் 10 வருடங்கள் ஊரில் இருந்து தான் வேலைக்கு வந்து கொண்டு இருந்தேன். எனது தந்தை இறந்த போது 1 ம் பிரதிவாதிக்கு 15 வயது இருக்கும் என்றும் 4 ம் பிரதிவாதிக்கு 1 வயது இருக்கும் என்றால் சரி தான். எங்களுடைய சகோதரர்களுக்குள் 1 அல்லது 2 வயது வித்தியாசம் இருக்கும் என்றால் சரி தான். நான் வேலைக்கு சேர்ந்து சுமார் 15 ஆண்டுகள் கழித்து தான் 4 ம் பிரதிவாதி வேலைக்கு சேர்ந்தார் என்றால் இருக்கலாம். நான் வேலைக்கு சேர்ந்த 5 ஆண்டுகள் கழித்து தான் 3 ம் பிரதிவாதியும் வேலைக்கு போய் சம்பாதிக்க ஆரம்பித்தார் என்றால் சரி தான். நாங்கள் 5 சகோதரர்களும் அவர் அவர் திருமணத்திற்கு பின்னர் தனி குடித்தனம் சென்று விட்டோம் என்றால் சிறிது காலம் கூட்டு குடும்பமாக இருந்து அதன் பின்னர் தான் தனி குடித்தனம் சென்றோம். எங்களது 5 சகோதரர்களும் அவர் அவர் சம்பள பணத்தை கூட்டு குடும்பத்தில் கொடுத்தது இல்லை என்றால் நான் என்னுடைய சம்பள பணத்தை எனது அம்மாவிடம் கொடுப்பேன். மற்ற சகோதரர்களை பற்றி எனக்கு தெரியாது. நான் எனது சம்பள பணத்தை எனது அம்மாவிடம் கொடுத்ததால் மட்டுமே கூட்டு குடும்பம் என்று கூறுகிறேன் என்றால் சொத்துக்களை பிரிக்காமல் இருந்ததாலும் தனித் தனியாக அவர் அவர் வேலைக்காக தனியாக வந்தாலும் கூட்டு குடும்பமாகத்தான்

இருந்தோம். நாங்கள் சகோதரர்களாக இருந்ததாலும் சொத்துக்களை பிரிக்காததாலும் கூட்டு குடும்பம் என்று கூறுகிறேனா என்றால் அதுவும் உண்மை தான். சொத்துக்கள் பிரிக்கப்படாமல் இருப்பதால் மட்டுமே ஒரு குடும்பம் கூட்டு குடும்பம் ஆகாது என்றால் சரி அல்ல. நானும் எனது சகோதரர்களும் அடங்கிய குடும்பம் எப்போதும் கூட்டு குடும்பம் என்ற வரையறைக்குள் அடங்கவில்லை என்றால் சரி அல்ல. பிராது 1 முதல் 4 இன சொத்துக்கள் மட்டுமே பூர்வீக சொத்துக்கள் என்றால் சரி தான். பிராது 5 வது இன சொத்துக்கு 1ம் பிரதிவாதி பெயரிலும் 6 வது இன சொத்துக்கு 3 ம் பிரதிவாதி பெயரிலும் கிரய பத்திரங்கள் உள்ளன என்றால் சரி தான். பிராது 1 முதல் 4 இன சொத்துக்கள் மொத்தம் 5 1/2 ஏக்கர் விஸ்தீரணம் கொண்டது என்றால் சரி தான். அந்த சொத்தில் உள்ள கிணற்றில் ½ பாத்தியமும் உள்ளது என்றால் சரி தான். அந்த கிணற்றை பிராதில் கூறவில்லை என்றால் சரி அல்ல. நான் ரூ.10, 000/- கொடுத்ததாகவும் சொல்லும் பிராது 6 வது இன சொத்துக்கான கிரய பத்திரம் 3 ம் பிரதிவாதி பெயரில் உள்ளது என்றால் அது கூட்டு குடும்ப சொத்து. 3 ம் பிரதிவாதி அவர் பெயருக்கு கிரயம் முடித்து விட்டார். வா.சா.ஆ.16 ல் நான் ரூ.10, 000/- கொடுத்ததாக குறிப்பிடவில்லை என்றால் சரி தான். என்னுடைய பிராதிலோ, வழக்கறிஞர் அறிவிப்பிலோ நிரூபண வாக்கு மூலத்திலோ பிராது 6 வது இன சொத்தை கிரயம் பெறுவதற்கு நானும் ரூ.10, 000/- கொடுத்தேன் என கூறவில்லை என்றால் சரி தான். நான் அவ்வாறு ரூ.10, 000/- கொடுத்து இருந்தால் வா.சா.ஆ.16 லும் அதை பற்றி குறிப்பிட்டு விட்டு பிராது, வழக்கறிஞர் அறிவிப்பு மற்றும் நிரூபண வாக்கு மூலத்தில் கூறி இருப்பேன் என்றால் சரி அல்ல. பிராது 6 வது இன சொத்து 3 ம் பிரதிவாதியும் தனிப்பட்ட சொத்து என்றும் அதனை பாகம் பிரிக்க கோர இயலாது என்றல் சரி அல்ல. பிராது 6 வது இன சொத்தில் பூமி மட்டுமே உள்ளது என்றும் வேறு எதுவும் இல்லை என்றால் சரி தான். வா.சா.ஆ.16 ல் 73 செண்ட் விஸ்தீரணம்

கொண்ட பூமியும், ½ உரிமைகொண்ட கிணறும் 1 வீட்டு மனையும் உள்ளது என்றும் உண்மையிலேயே நான் ரூ.10, 000/- கொடுத்து இருந்தால் அது பற்றி எனக்கு தெரிந்து இருக்கும் என்றால் சரி அல்ல. எப்போதும் கூட்டு குடும்பமாக இருந்தது இல்லை என்றும் மேட்டுப்பாளையத்தில் உள்ள என்னுடைய வீடு எனக்கு தனிப்பட்ட வீடு என்பது போல பிராது 6 வது இன சொத்து 3 ம் பிரதிவாதிக்கு தனிப்பட்ட சொத்து என்றால் சரி அல்ல. பிராது 6 வது இன சொத்தை பொறுத்து பாகம் பிரிவினை கோர இயலாது என்றால் சரி அல்ல. நான் அந்த சொத்தை வாங்க பணம் எதுவும் கொடுக்காததால் தான் அந்த சொத்து எத்தனை புல எண்களில் அடங்கி உள்ளது என்ற விவரம் எனக்கு தெரியவில்லை என்றால் சரி அல்ல. 3 ம் பிரதிவாதி பிராது 6 வது இன சொத்தை தன்னுடைய தனிப்பட்ட பணத்தை வைத்து ரூ.21, 800/- செலுத்தி கிரயம் பெற்றுள்ளார் என்றால் சரி அல்ல. 3 ம் பிரதிவாதி செய்து வந்த அரசு வேலை மற்றும் மேலே சொன்ன முறையில் அவருக்கு வந்த வருமானத்தை வைத்து தனி பட்ட முறையில் பிராது 6 வது இன சொத்தை கிரயம் பெற்றுள்ளார் என்றால் சரி அல்ல.

மேலே கண்ட சாட்சியின் வாக்குமூலம் திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் அவர் கூறியவாறு பதியப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரிடம் கையொப்பம் /கைரேகை பெறப்பட்டது.

ஒம்/. கா. கெங்காராஜ்,
சார்பு நீதிபதி, மேட்டுப்பாளையம்.